

கடலூர் மாவட்டம் நெய்வேலி என்.எல்.சி. ரகசிய வாக்கெடுப்பு தேர்தலில், வாக்குப்பதிவு அலுவலகப்பகுதிகள், ஆலைப்பகுதிகள், என,11, வாக்குச்சாவடிகளில் நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியச் செயலாளர் வி. சிவகுமார் மற்றும் தொ.மு.ச. தலைமை நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், தி.மு.க. தோழமை சங்க நிர்வாகிகள், தொ.மு.ச. துணைத் தலைவர்கள், பகுதிச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சி.பி.எப். இயக்குனர்கள், பேரவை பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாக்குப்பதிவுகளை கண்காணித்து, தொழிலாளர்களை, வரிசை எண் 6,க்கு வாக்களிக்கும் படி கேட்டுக் கொண்டனர்.

### கடலூர் தொகுதியில்

# மலட்டாற்றை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்துக!

## சட்டப்பேரவையில் – கடலூர் கோ.ஐயப்பன் கோரிக்கை!

சென்னை, ஏப்.26-
சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது கடலூர் தொகுதி உறுப்பினர் கோ.ஐயப்பன் மலட்டாற்றை ஆழப்படுத்தி கரைகளை பலப்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கோ.ஐயப்பன்:** கடலூர் தொகுதியிலுள்ள மலட்டாற்றை ஆழப்படுத்தவும் அதன் கரைகளைப் பலப்படுத்தவும் அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** கடலூர் தொகுதியில் உள்ள மலட்டாற்றின் கரைகளை பலப்படுத்தி ஆழப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். கடலூர் தொகுதியில் உள்ள தென்னம்பாக்கம் கிராமம் முதல் மதலப்பட்டு கிராமம் வரை வட மலட்டாறு ஆற்றின் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் வட மலட்டாற்றின் படுகையில் உள்ள மண்திட்டுகளை அகற்றுதல் ஆகிய பணிகளை நிதிநிலைமைக் கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.



**கோ. ஐயப்பன்:** நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்தின் நிலையை அறியாதவர் அல்ல. இருந்தபோதிலும் முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் அரசு விழாவிற்கு கடலூர் வந்தபோது பெண்ணையாற்றின் கரைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, சீர்படுத்து வதற்காக CONCRETE அமைப்பதற்காக அரசு விழா மேடையிலே 57 கோடி ரூபாய் அறிவித்து பெண்ணையாற்றின் கரைகளை பலப்படுத்துங்கள் என்று உத்தரவிட்டு, அது திட்ட மதிப்பீடுகள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வருவதற்கு தயாராக இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று மழை எங்கே பெய்தாலும் எங்களுக்கு ஆறுகள் சங்கமிக்கின்ற முகத்துவாரங்கள் கடலில் கலக்கின்ற நிலை கடலூரில் இருக்கின்ற காரணத்தால் எங்கள் பகுதிக்கு வரும்போது ஆற்றின் கரைகள் முழுவதும் வெள்ளம் வந்து கரைகள் உடைந்து, ஊருக்குள் புகுந்து பல்வேறு நிலைகளில் ஏழை மக்களை துன்புறுத்துகின்றது. பெஞ்ஜால் புயலிலே திடீரென இரவு 11 மணிக்கு வந்த வெள்ளத்தின் காரணமாக பெண்கள் எல்லாம் வெறும் புடவையோடும், ஆண்கள் எல்லாம் வேட்டி, சட்டையோடு வெளியில் வந்து பல்வேறு சிரமங்களுக்கு, பல இலட்சம் பொருட்கள் வீணடிக் கின்ற நிலையை ஆற்று வெள்ளம் ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் இதை கடந்த ஆண்டுகூட நான் கேட்ட போது, பல்வேறு பணிகளுக்கு நியாயமான பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையிலே இதையும் செய்து தர வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** பொதுவாக அவருடைய தொகுதியில் சாந்தகுப்பம் கிராமத்தில் கொண்டங்கி ஏரியை சீர்படுத்துவதற்காக ரூ. 1.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பெரியகங்கணாங்குப்பத்திலே பெண்ணையாற்றின் வலது கரை தடுப்புக்காக ரூ.6.30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வேலை நடக்கிறது. மலட்டாற்றின் கீழ்மங்கலம் அணைக்கட்டின் மருகூர் கிராமத்தில் அதை புனரமைப்பதற்காக ரூ.2.2 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மஞ்சகுப்பம் குண்டுஉப்பலவாடி நகரம் முதல் கிராமம் வரை மேற்கோள்ளப்படவுள்ள பணிகளுக்காக ரூ.9.9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், பெஞ்ஜால் புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் வட மலட்டாற்றின் கரைகளின் மேல் வடிந்து கரைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இந்தக் கரைகளை, உடைப்புகளை சரி செய்வதற்காக உடனடியாக நிரந்தர வெள்ளத் தடுப்பிற்காக செய்ய 7 கோடி ரூபாயாக திட்டமிட்டு, அதற்காக அரசு நடவடிக்கை எடுக்கிறது.

**கோ. ஐயப்பன்:** நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு இதே மன்றத்திலே நான் கேள்வி கேட்கின்றபோது நல்லவர் ஆட்சியிலே மழை வரும், அதிகமாக வெள்ளம் வரும். அதை பொறுமையாகத்தான் சீர் செய்யப்படும் படிப்படியாகத்தான் சீர் செய்யப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அந்த வகையில் நல்லவர் ஆட்சியிலே மேலும் மேலும் மழை பெய்து கொண்டிருக்கின்றது. தாங்கள் அருள் கூர்ந்து மலட்டாற்றின் கரைகளை சீர் செய்து தருமாறும் அதேபோன்று பெண்ணையாற்றிலே ஒரெயாரு தடுப்பணைதான் நான் கேட்டிருக்கின்றேன்.

அமைச்சர் அவர்கள் அழகியநத்தம் வெள்ளக்கரை பகுதியிலே வெள்ளப்பாக்கம் அழகியநத்தம் பகுதியிலே ஒரு தடுப்பணை அமைத்து எங்கள் கடலூர் தொகுதி மக்களை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** காப்பாற்றப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.




திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி குடியாத்தம் வடகிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா முன்னிட்டு அகரம்சேரி மறைந்த முன்னாள் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சண்முகம் அவர்களின் நினைவாக மக்கள் அறக்கட்டளை சார்பில் அகர்வால் கண் மருத்துவமனை சார்பாக கண் சிகிச்சை முகாம், வேலூர் எம்.எம்.எம். மருத்துவமனை சார்பாக எலும்பியல் சிகிச்சை ரத்ததான முகாமை ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், மாதனூர் ஒன்றிய குழு தலைவர் ப.ச.சுரேஷ்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் ஆனந்தி நித்தியானந்தம், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சர்மிளா, ஆம்பூர் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சிக்கல் பொ. கணபதி

**ஏப்ரல் 26 (1996)**



நாகை மாவட்டம், சிக்கல் கிளைச் செயலாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு ஆகிய பொறுப்புகளில் பணியாற்றியவர்.

சிக்கல் ஊராட்சி மன்றத்திற்கு ஐந்துமுறை போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாகை ஒன்றியப் பெருந்தலைவராகவும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் இயக்குநர்களில் ஒருவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சிறைவாசத்தில் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

முதல்வர் தலைமையிலான அரசு – இதுவரை 4,311 டன் கேழ்வரகு கொள்முதல் செய்து

# 2,227 விவசாயிகளுக்கு ரூ.17 கோடியே 30 லட்சம் வழங்கல்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, ஏப்.26-
சட்டப்பேரவையில் தருமபுரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் அர.சக்கரபாணி அளித்த பதிலும் வருமாறு:-

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** தருமபுரி மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் அர. சக்கரபாணி :** தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்டம், அரூர் மற்றும் நரிப்பள்ளியில் 11.3.2025 அன்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, தற்போது அங்கு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது என்பதை வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** நாம் கடவுளாக வணங்கும் விவசாயிகளின் நலன் கருதி, தருமபுரி மாவட்டத்தினுடைய மையப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தருமபுரி மாவட்டத்தில் ராகி கொள்முதல் நிலையம் அமைத்துத் தந்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்ணாகரம், தருமபுரி, அரூர் பகுதிகளிலுள்ள நேரடி கொள்முதல் நிலையங்களில் ராகி கொள்முதல் செய்யப்படுகிறது. அதேபோன்று தருமபுரி நகரத்திலும் கொள்முதல் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், தருமபுரி நகரத்தில் 95 அரிசி ஆலைகள் உள்ளன; அவற்றில் 500 லாரிகள் இருக்கின்றன; 5,000 கூலித் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அந்த அரிசி ஆலைகள் தொடர்ந்து இயங்கி, அந்தத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைத்திட ஏதுவாக, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அந்த ஆலைகள் இயங்குவது நின்று விடாத வகை யில், வெளி மாவட்டங்களிலிருந்தும் நெல் கொண்டு வரப்பட்டு அங்கு சேமித்து வைக்கப்பட்டு, தொடர்ந்து வேலை வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** தமிழ்நாட்டிலேயே தருமபுரி மாவட்டத்தில்தான் அதிகமான நெல் அரவை ஆலைகள் இருக்கின்றன. தெரிவித்தது உண்மை. எனவே, உறுப்பினர் அவர்கள் அந்த நெல் கொள்முதல் அரவை நிலையங்களுக்கு போதுமான நெல்கள் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 24 இலட்சம் மெட்ரிக் டன், இந்த ஆண்டு 32 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை நெல் கொள்முதல் செய்கின்ற பருவம் இருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணமாக தருமபுரி மாவட்டத்திற்கு கூடுதலாக, அந்த அரவை ஆலைகளுக்கெல்லாம் வேண்டிய நெல்லை அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இங்கு கேழ்வரகைப் பற்றி உறுப்பினர்கள் கூறினார்கள். குறிப்பாக, கடந்த காலத்தில் கேழ்வரகு விவசாயிகளிடமிருந்து 26, 27 ரூபாய்க்குத்தான் வாங்கினார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் இதுவரை 4,311 டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு, 2,227 விவசாயிகளுக்கு 17 கோடியே 30 இலட்சம்



ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் 2024-2025 ஆம் ஆண்டில் சுமார் 134 விவசாயிகளிடமிருந்து 175 கோடியே 75 இலட்சம் மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு, 71 இலட்சத்து 10 ஆயிரம் விவசாயிகள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் 829 விவசாயிகளிடமிருந்து 1,908 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 8 கோடியே 18 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கையை வருகின்ற காலத்திலே அரசு கண்டிப்பாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் பகுதி நேர நியாய விலைக் கடை வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவரும் விரைவாக பிரித்துத் தருவதாக உறுதி கூறினார். ஆனால், இதுவரை எங்கள் தருமபுரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மிட்டாரெட்டிஅள்ளி ஊராட்சி பூமரத்தூர், மானியதஅள்ளி ஊராட்சி ஜீவா நகர், மானியதஅள்ளி ஊராட்சி கீழ்பூரிக்கல், மானியதஅள்ளி ஊராட்சி மலையப்ப நகர், அம்பேத்கர் காலனி, நல்லம்பள்ளி பி.சி. தெரு, ஆவாரங்காட்டூர், மத்தாளப்பள்ளம், கடுகவாரம் பட்டி, சவுலூர், எம்.கே.எஸ். நகர் (மணியடிக்கப்பெற்றது) மற்றும் 13வது வார்டு, 27வது வார்டு போன்ற இடங்களில் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்தேன். இந்த ஆண்டாவது விரைவாக பிரித்துக் கொடுத்து, அந்தப் பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்கு ஆணை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஒரே ஒரு கோரிக்கை. அனைத்து ரேஷன் கடைகளுக்கும் ஏழ்மையான பெண்கள்தான் வந்து அரிசி உள்ளிட்ட பொருட்களை வாங்குகிறார்கள். மழைக் காலத்திலும், வெயில் காலத்திலும் வாங்கச் செல்வதால் ஒரு நிழல் தரும் மரம் நட ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது மேற்கூரை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களையும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**அர.சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள் ஒரு பட்டியலே சொல்லியிருக்கிறார்கள். பகுதி நேரக் கடை களைப் பிரித்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். கண்டிப்பாக, எங்கள் துறையினுடைய அதிகாரிகளை அங்கே அனுப்பி தகுதி இருக்கின்ற அத்தனை கடைகளும் விரைவிலே பகுதி நேரக் கடைகளாக பிரித்துத் தரப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அதைப் பிரித்துத் தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படியில்லையென்றால், சென்னை தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற எங்கள் துறைக்கு அனுப்பினால், அதை உடனடியாக தகுதியிருக்கின்றபட்சத்தில் அந்த பகுதி நேரக் கடைகள் பிரித்துத் தரப்படும்.

அதேபோன்று, ரேஷன் கடைகளுக்கு முன்பு வெயில் காலத்திலும், மழைக் காலத்திலும் மக்கள் வந்து நின்றால், வெயில், மழையில் நனைகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார். ஏற்கெனவே, எங்கள் துறையின் சார்பாக இந்த ஆண்டு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான இடங்களிலெல்லாம் மரங்கள் நட வேண்டுமென்று முடிவு செய்து மரங்கள் நட்டுக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளிலும் மரங்கள் நட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தோலோசித்து, அனைத்து நியாய விலைக் கடைகளிலும், மரம் நடுகின்ற பணிகளாக இருந்தாலும் சரி முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நியாய விலைக் கடைகளுக்கு முன்பாக கூரைகள் அல்லது எப்போதும் நிரந்தரமாக இருக்கின்ற வகையிலே தகடுகளுடன்கூடிய கூரைகள் அமைப்பதற்கு அரசின்மூலம் விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி பதிலளித்தார்.




கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, பத்திரக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த சரவணன், ஜெயா தம்பதியின் மகள் சரண்யா, UPSC தேர்வில் அகில இந்திய அளவில் 125 வது இடம் தமிழ்நாடு அளவில் 7 ஆவது இடம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இதனை அறிந்த நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், சபா.இராசேந்திரன் நேரில் சென்று வாழ்த்தினார். சகோதரி சரண்யா, நான் முதல்வன் திட்டம் , எனக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது என சபா.இராசேந்திரனிடம் கூறினார். மேலும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொண்டார். உடன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், மாவட்டப் பிரதிநிதி ஆடலரசன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் அ.குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.சந்தோஷ்குமார், நடராஜன், தட்சணாமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா குமரன் (எ) குமாரசாமி

**ஏப்ரல் 26 (2024)**



தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி, மயிலாடுதுறை சுற்றுப் பகுதியில் கழகப் பணியாற்றியவர்.

நெருக்கடி கால மிசா சட்டம் நடைமுறையில் இருந்தபோது, சீர்காழிக்கு வந்த முத்தமிழறிஞர் கலைஞரை தைரியமாக தனது வீட்டிற்கு அழைத்து உணவளித்தார். இதன் காரணமாக 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

சீர்காழி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை, குத்தாலம் ஆகிய வட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு "புரவலர் நிதி" வழங்கி கல்வி வளரப் பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**